மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கும், கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும் என்று நம்பு கிறேன், சில கருத்துக்களுக்கு பதில் கிடைக்கவில்லை யென்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பேட்டில் உள்ளன, அவைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

7. முதலமைச்சரின் திருக்கோயில்கள் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதிக்கு உறுப்பினர்கள் வழங்கும் நன்கொடை குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதில் உரையைக் கேட்டுக் கொண் டிருந்த மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், குறிப்பாக ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அண்ணா மலை, தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் காலம் முழு வதற்கும் உரிய ஊதியத்தை, மாண்புமிகு முதலமைச்சர் ஆலயப் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்கு வழங்கு வதாக (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அறிவிப்பைக் கொடுத் திருக்கிறார் இதைப்போல இன்னும் பல சட்டமன்ற உறுப்பினர்கள், என்னிடத்திலேயே தகவல் தெரிவித்திருக்கி றார்கள், சட்டமன்றத் துறையிலேயிருந்து நேரடியாக அளிக்குமாறு பலர் தெரிவித்திருக்கிறார்கள், அதிலே ஒரு சிரமம் இருக்கிறது. இந்தச் சம்பளத்தை மட்டும், அந்த உறுப்பினர் பெயருக்கு அன்றி வேறு யாருக்கும் கொடுக்க முடியாது என்கிற தெளிவான விதி இருக்கிற காரணத்தால்..

மாண்புமிகு டாக்டர். ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அண்ணாமலை அவர்களுக்கும், நன்கொடை கொடுக்க முன் வந்துள்ள மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய உளமார நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில், அவர்களே மாதா மாதம் இந்தச் சம்பளத்தை சட்டமன்றத் துறையிலிருந்து பெற்றுக் கொண்டு அதனை என்னிடத்தில் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய வேண்டு கோள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும். இப்படி ஒவ்வொரு மாதமும் ரூபாய் 2,750 நீங்கள் அனுப்பிக் கொண்

டிருக்கிறபோது உங்களுடைய ஐந்தாண்டு முடியப் போகிற நேரத்திலேதான் மொத்தத்தொகையும் சேரும். இப்படிச் சட்டமன்ற பேரவைத் துறையிலிருந்து கொடுக்க முடியாது இருக்கிற ஒரு சூழ்நிலையும் வரும், எனவே, ஒட்டுமொத்த மாக உங்களுடைய காலம் முழுமைக்கும் உரிய சம்பளத்தைக் கணக்கிட்டு மொத்தமாகக் கொடுக்க முன்வந்தால், சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பிலே நானும் ஒரு பெரிய நிதியை மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலயப் பராமரிப்பு நிதிக்குக் கொடுப்பதாக அமையும், (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, திரு. அண்ணாமலையும் ஏனைய உறுப்பினர்களும் அதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2.40

6, மானியக் கோரிக்கைகள், 1992–93—விவாதமும் வாக் கெடுப்பும்—(தொடர்ச்சி),

கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய—அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்—(தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண், 12—தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படு கின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே. செல்வராஜ்,

திரு. கே. செல்வராஜ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது,

திரு. ஜி பழனிசாமி. தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்,

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி. அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர் மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.